**இலங்கை கிரிக்கெட்டின் - 2023**
---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை கிரிக்கெட்டின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, திரண்ட நிதியத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 21அ இன் கீழான ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை கிரிக்கெட்டின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட்டின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் தெற்காசியச் சுற்றுலாவிற்காக பெற வேண்டிய அனுசரணை உரிமைகளுக்கான வருமானமான ஐ.அ.டொலர் 187,085 தொகைக்கு சமனான ரூபா 37.5 மில்லியன் பெறுமதியான பணத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறிக்கையின் திகதி வரை இந்த பணம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | பெற வேண்டிய மீதிகளை கால தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இருந்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ரூபா 428.4 மில்லியன் வற் வரி மீதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தகவல்களுடன் ஒப்பிடப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வரி ஆலோசகர்களின் ஆதரவுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், இதுவரை எந்தத் தொகையும் அறவிடப்படவில்லை. இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சட்ட | அறவிடப்பட வேண்டிய பணத்தை தாமதமின்றி தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுத்துள்ளது. | |
| (இ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு பெற வேண்டிய வரி மீதியான ரூபா 38.2 மில்லியன் நிறுத்தி வைத்தல் வரி மீதியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தகவல்களுடன் ஒப்பிடப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரி ஆலோசகர்களின் ஆதரவுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இருந்து தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், இதுவரை எந்தத் தொகையும் அறவிடப்படவில்லை. இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. | அறவிடப்பட வேண்டிய பணத்தை தாமதமின்றி தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தற்போதைய காப்புறுதி முறையின் கீழ், ஒரு வருடத்திற்கும் மேலாக மருத்துவக் பட்டியல்களுக்காக ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா ஒரு மில்லியன் தொகையானது காப்புறுதி நிறுவனத்திடமிருந்து மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய பட்டியல்களில் உள்ள வழுக்கள் அல்லது உரிய காலப்பகுதியில் விளையாட்டு வீரர்கள்/ஊழியர்களால் சம்பந்தப்பட்ட பட்டியல்கள் காப்பீட்டு நிறுவனத்திடம் சமர்ப்பிக்கத் தவறியதால் ஏற்பட்டது. சம்பந்தப்பட்ட பெற வேண்டிய காப்பீட்டு பட்டியல்களுக்குரிய பணத்தை விளையாட்டு வீரர்கள்/ஊழியர்களிடம் இருந்து செலுத்த வசூலிக்க நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | உரியவர்களிடம் இருந்து பெற வேண்டிய பணத்தை தாமதமின்றி வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 15 மில்லியன் பிடி காசு தொகையை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற எல்பிஎல் (LPL) போட்டியில் வெற்றி பெற்ற ஜப்னா கிங்ஸ் அணிக்கு வழங்கப்படவிருந்த ரூபா 6 மில்லியன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்படாதிருந்தது. | இந்த மீதியில் ரூபா 1,002,100 தொகை 2024 இன் முதல் சில மாதங்களில் செலுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டது. ஏனைய ஒப்பந்ததாரர்கள் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்காததால் நிலுவைகள் கணக்குகளில் தக்கவைக்கப்படுகின்றன. தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால், நிலுவைத் தொகை வருமானமாக கணக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஜப்னா கிங்ஸ் (Jaffna Kings) அணிக்கு எல்பிஎல் (LPL) போட்டியின் பரிசுத் தொகையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. | செலுத்த வேண்டிய பணத்தை தீர்ப்பதற்கான கடப்பாடுகள் கண்டறியப்பட்டு தீர்க்கப்பட வேண்டும் அல்லது வருமாத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 மீள செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 1.6 மில்லியன் ஒரு வருடத்திற்கும் மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. | உரிய தரப்பினர் ஆவணங்களை ஒப்படைக்காததால் நிலுவைத் தொகை இன்னும் கணக்கில் உள்ளது. நீங்கள் பணத்திற்கு விண்ணப்பிக்கவில்லை என்றால், அது ஒப்புதல்களுடன் வருமானத்திற்கு எடுக்கப்படும். | |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,073.56 மில்லியன் ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,047.51 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,121.07 மில்லியன் ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அந்நிய செலாவணி வருமானம் ரூபா 7,738.35 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் கடந்த வருடத்தை விட அபிவிருத்திச் செலவினம் ரூபா 616.02 மில்லியனால் அதிகரித்தமை ஆகியன இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தக் கிரயம் ரூபா 2.9 மில்லியனான இலங்கை கிரிக்கெட் தலைமையக கட்டிடத்தினை புதுப்பிக்கும் செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இதுவரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் 2024 ஆம் ஆண்டில் மூலதனமாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பணிகளை பூர்த்தி செய்து மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 64.7 மில்லியன் ஒப்பந்த கிரயமுடைய நாடளாவிய ரீதியிலான மத்திய விக்கெட் (80'x10') மற்றும் பக்க விக்கெட் (45'x 6') ஆகியவற்றினை நிர்மாணிக்கும் செயற்பட்டத்திற்காக கட்டுமான ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்யும்போது, தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் நிராகரிக்கப்பட்ட இரு விலைக்கேள்வியாளர்களுக்கு ஒப்பந்தம் கையளிக்க பட்டிருந்தது. | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) உள்ளடங்கியுள்ள கைத்தொழில்களில் Turf Wickets தயாரிக்கும் கைத்தொழில் உள்ளடங்கி இல்லை. இது எமது நாட்டிற்கு புதிய கைத்தொழில் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடி செயற்திட்டம் ஆகும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றி பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த 19 வயதிலும் குறைந்தோருக்கான உலக கோப்பைக்கான விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்காக 04 கிரிக்கெட் சங்கங்களுக்கு ரூபா 460.73 மில்லியன் முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. குறித்த பணிகள் 2024 ஜனவரி 19 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவற்றுள் எந்த ஒரு | இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு அமைச்சரின் தலையீடு காணப்படும் எனின் செயல் திட்டத்தினை இடை நடுவே நிறுத்தக்கூடும் எனும் நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த நான்கு விளையாட்டு சங்கங்களினால் மதிப்பிடப்பட்ட மொத்த தொகையும் முற்பணமாக கோரி இருந்ததுடன், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் அந்த | செயற்திட்டத்தினை உரிய காலத்தில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்றாத காரணத்தால் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்தினை அறவீடு செய்ய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டமும் உரிய காலப்பகுதியுள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் மேற்படி பணத்தில் ரூபா 195.1 மில்லியன் குறித்த கிரிக்கெட் சங்கங்களால் கையிருப்பில் வைத்திருந்த பின்னர் பணம் மீள வழங்கப்பட்டமையால் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டம் அண்ணளவாக ரூபா 4.8 மில்லியன் ஆகும். 2024 மே 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 79.73 தொகையொன்று குறித்த பணிகளில் ஈடுபடுத்தாது மேற்படி 04 கிரிக்கெட் சங்கங்களில் குறித்த பணம் கையிருப்பில் காணப்பட்டது. | விளையாட்டு சங்கங்களுக்கு 85 சதவீதமான முன்பணமாக வழங்கப்பட்டது. குறித்த விளையாட்டு சங்கங்களால் குறித்த பணத்தை மீள கையளிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஏற்பட்ட வட்டி நட்டமானது அந்த கிரிக்கெட் சமூகங்களிலிருந்து மீள அறவீடு செய்வதற்கு நிறைவேற்று குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள நிர்மாணங்களுக்கு பணம் செலுத்துவதற்கு அந்த விளையாட்டு சங்கங்கள் கடப்பட்டு இருப்பதால் உரிய பணத்தை அவர்களின் கணக்குகளில் வைத்திருத்தல் அத்தியாவசியமான விடயமாகும். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டில் பல்வேறு அபிவிருத்தி பணிகளுக்காக 07 கிரிக்கெட் சங்கங்கள் மற்றும் கிரிக்கெட் சமூகங்களுக்கு மற்றும் 03 பாடசாலைகளுக்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 297.86 மில்லியன் தொகையில் ரூபா 80.3 மில்லியனுக்கு உரிய பணிகள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 217.56 மில்லியன் எஞ்சிய பணமானது 2024 மே 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட மதியரையாளர்களின் கண்காணிப்பின் கீழ் பௌதீக மற்றும் நிதி ரீதியான செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் மற்றும் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் முன்பணங்களை தீர்ப்பதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணமாக வழங்கப்பட்ட பணத்தில் சேர்த்து திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் பௌதீக மற்றும் நிதி ரீதியான செயல் முன்னேற்றத்தினை கணிப்பீடு செய்து முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 தாமதமான செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தியகமவில் ஆக குறைந்தது 40,000 ஆசன எண்ணிக்கையுடனான அனைத்து அம்சங்களுடனான சர்வதேச கிரிக்கட் மைதானம் ஒன்று ரூபா 08 பில்லியன் மதிப்பிடப்பட்ட செலவினத்தில் நிர்மாணிப்பதற்காக 21 ஏக்கர்கள் பரப்பளவான காணியை வழங்குவதற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு இணங்கியிருந்த போதிலும், இதுவரையிலும் அதன் பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் செயல்திட்டத்தின் கட்டுமானங்களை ஆரம்பிக்க முடியாது இருந்தது. குறித்த காணியை சட்ட ரீதியான பெற்றுக் கொள்வதற்கு முன்னர் மற்றும் உரிய தரப்பினருடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப்படாது செயல்திட்டத்தின் நிர்மாணம் மற்றும் அளவீட்டு கட்டணங்களாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டில் ரூபா 3.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | இதற்குரிய காணியானது விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு சொந்தமற்றது என்பதால் அதனை இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானது என புரிந்து கொண்டதுடன், அந்த காணியின் உரித்தினை தீர்ப்பதற்காக அமைச்சரவை பத்திரம் ஒன்றின் மூலம் காணிகள் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் அடிப்படையில் வழங்குவதற்கு உரிய பணிகள் தற்போதைய விளையாட்டு அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். | நிர்வாக நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொண்டு செயற்திட்டத்தில் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொலன்னறுவை தேசிய கிரிக்கெட் மைதானம் மற்றும் பிரதான பார்வையாளர்கள் கட்டிடத்தில் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 17 ஹெக்டேயர்கள் பரப்பளவான அரச காணிகள் 30 வருட குத்தகை அடிப்படையில் வணிக அலுவல்களுக்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு உரிய அமைச்சரால் 2022 அக்டோபர் 28 ஆம் திகதிய 2304 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டு | ஹிங்குரன்கொட பிரதேச செயலகத்தினால் இந்தப் பணி தாமதிக்கப்பட்டதனால் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த மைதானத்தின் முதலாவது போட்டி 2024 ஜூலை 18 ஆம் திகதி மைதானத்தில் மேற்கொள்ளப்பட்டு மைதானம் திறக்கப்படவுள்ளது. | நிர்வாக நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொண்டு செயற்திட்டத்தின் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கும், நிறைவு செய்துள்ள விளையாட்டு மைதானத்தினை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் உரிய குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராததுடன் பார்வையாளர் கூடத்தினை நிர்மாணிக்கும் பணிகளும் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிர்மாண கிரயம் ரூபா 154 மில்லியனான மேற்படி கிரிக்கெட் மைதானத்தில் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரிய பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் மேலதிக சேர்ப்பனவுகளுக்கு ரூபா 27.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வு திகதியான 2024 ஜுன் 30 ஆம் திகதி வரையிலும் மைதானம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லைல. | | |
| (இ) | இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கண்டி உயர் தொழில்நுட்ப பயிற்சி நிலைய செயற்திட்டத்திற்காக கண்டி பிரதேசத்தில் 1 ஏக்கர் 3 ரூட்கள் 20.2 பேர்சஸ் பரப்பளவான காணி 30 வருட குத்தகை அடிப்படையில் ரூபா 26.5 மில்லியனுக்கு 2017 ஏப்ரல் 20 தேதி குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. இந்த காணியில் வசிக்கும் ஒருவரை அகற்றுவதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ரூபா 500,000 செலுத்தியிருந்ததுடன் காணியின் வரைபடங்களில் இணக்கமின்மை காணப்படும் நிலைமையின் கீழ் உரித்தானது தீர்க்கப்படாது காணப்படும் காணி ஒன்றுக்காக குத்தகை உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட வழக்கறிஞருக்கு ரூபா | விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள், உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வி சார்ந்த பதவியணிக்கு மிகவும் இலகுவில் அடையக்கூடிய இடம் ஒன்று என்பதால் இந்த மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்கு கண்டி நகரம் தெரிவு செய்யப்பட்டது. இந்த செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது பல்வேறு சிக்கல் நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. | செயற்திட்டத்துக்காக காணியை குத்தகைக்கு எடுக்கும் போது தெளிவான உரித்துடைய காணி ஒன்று தெரிவு செய்யப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு செய்யத்திறனுடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 525,000 தொகை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் பின்னர் இந்த செயல்திட்டத்தில் எந்த ஒரு நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் காணி குத்தகைக்கு எடுக்கப்பட்டு 06 வருடங்கள் கடந்துள்ள போதிலும் கட்டுமானங்கள் ஆரம்பகட்டத்திலேயே காணப்பட்டன. | | |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறைவேற்ற தரத்தின் அனுமதியுடன் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் இணைப்பாளர்கள் 44 பேர் மாகாண மட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது அவர்களுக்கு மாதாந்த படிகள், விழா மற்றும் இடர்படிகள், போக்குவரத்து செலவினங்களின் மீளளிப்பு எனுமாறு ரூபா 65.98 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது இந்த இணைப்பாளர்களுக்கு நாளாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை இனம் கண்டு சாட்டுதல் செய்வதற்கு பதிலாக மிகவும் குறுகிய காலத்தினுள் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு பணி அல்லது இரண்டு பணிகள் மாத்திரம் ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் அவர்களுக்கு உரிய நிரந்தர கடமை பதவிகள் தொடர்பில் ஆராயாது மேற்படி நபர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தமையால் அவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகைக்கு ஒப்பான சேவையொன்றினை பெற்றுக்கொள்ளப்பட்டதா | ஒருங்கிணைப்பாளர்களுக்கு நாளாந்த கடமைகள் ஒப்படைக்கப்படாத போதிலும் வருடத்தின் ஆரம்பத்தில் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நாளாந்தம் நிறைவேற்றுதல் மாதாந்த அறிக்கைகள் மூலம் அவதானிக்கப்படுகிறது. ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் போது மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து செலவினங்களை மீளளிப்பு செய்வதற்காக மாதாந்த படி ஒன்று செலுத்தப்படுகிறது. இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பணிகளுக்கு அவர்கள் அர்ப்பணிக்கும் காலம், எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்பு ஆகியவற்றுக்கு தற்போது செலுத்தப்படும் படிகள் போதுமானது அல்ல என்பது எமது நம்பிக்கையாகும். | நாளாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை இனம் கண்டு அந்த பணிகளை நிறுவனத்தின் பதவியணியை ஈடுபடுத்தி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| என்பது கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியாது இருந்தது. | | |
| (ஆ) 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டு அதிகாரச் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுகள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சரால் 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய 2310/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 5(6) விதிக்கு முரணாக தற்போது புத்தளம் மாவட்டத்தில் கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளராக செயல்படும் பாராளுமன்ற அமைச்சர் ஒருவருக்கு ரூபா 2.2 மில்லியன் தொகையான கொடுப்பனவொன்று மீளாய்வாண்டில் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | விளையாட்டு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்படும் தேசிய போட்டி சங்கங்களின் கட்டளைகளுக்கு இணங்க செயல்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 இன் 10 இலக்க மற்றும் 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திருத்தப்பட்ட அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுயாதீனமான சேவை வழங்குநர் ஒருவருக்கு சேவை கட்டணங்களை செலுத்தும் போது 5 சதவீத நிறுத்தி வைத்தல் வரி (WHT) கழிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த அண்ணளவாக ரூபா 794.45 மில்லியன் ஒப்பந்த பணத்தின் அடிப்படையில் மற்றும் கிரிக்கெட் நடுவர்கள், தேர்வாளர்கள், வர்ணணையாளர்கள் மற்றும் மதியரையாளர்களுக்கு | மேற்கூறிய சட்டங்களின் படி, ஒப்பந்த அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்ட வீரர்கள், நடுவர்கள், தேர்வாளர்கள், வர்ணனையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் தங்குமிட வரிக்கு உட்பட்டவர்கள் என்பதற்கான எந்தவொரு பதிவும் இல்லாதிருந்ததுடன், மேற்கண்ட ஒப்பந்த அடிப்படையில் சேவையை பெற்றுக்கொள்ளும் | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் விளக்கத்தைப் பெறுவதற்கு அல்லது மேற்படி தொகையின் மீதான நிறுத்தி வைத்தல் வரியைக் கழிப்பதற்கான நிறுவனத்திற்கு இருக்கும் கடமைகளை உறுதிசெய்ய ஆலோசனை பெற வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட கட்டணத்தின் அடிப்படையில் மேற்படி ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் வரி குறைக்கப்பட்டு இருக்கவில்லை. இது தொடர்பில் உள்நாட்டு இறைவரஜ ஆணையாளர் நாயகத்திடம் வினவி அவரது வெளிப்பாட்டினை பெற்றுக் கொள்வதற்கு அல்லது மேற்படி பணத்தின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் வரியை கழிப்பதற்கு நிறுவனத்திற்கு காணப்படும் கடப்பாடு தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே ஒருங்கிணைப்பாளர்களுக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 65.98 மில்லியன் கொடுப்பனவுகளுக்கு உரிய முறையில் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிபுணர்கள் நிறுத்தி வைத்தல் வரிக்கு உட்பட்டவர்கள் அல்ல என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். . | |

**3.5 வருமானம் இழக்கப்படல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 19 வயதிலும் குறைந்த உலகக்கோப்பை போட்டியின் அனுசரனை இழக்கப்பட்டமையால் ICC Business Corporation FZLLC உடன் கைச்சாத்திரப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 2.46 மில்லியனுக்கு சமனான ரூபாய் 787 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்த உலகக்கோப்பை போட்டிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த காலத்தினுள் சுற்றுலா விடுதிகளில் ஒதுக்கப்பட்டு இருந்த 700 அறைகளின் அந்நிய செலாவணி வருமானமும் அதன் மூலம் கிடைக்கவிருந்த சுற்றுலா நலன்களும் நாட்டிற்கு இழக்க பட்டிருந்தது. | முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரின் தீங்கிழைக்கும், தன்னிச்சையான மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளால், போட்டியை நடத்துவதில் அனுசரணை இழக்கப்பட்டமையால், இலங்கை கிரிக்கெட்டுக்கு நேரடியாக 2.46 மில்லியன் அமெரிக்க டொலர் நேரடியான இழப்பு ஏற்பட்டுள்ளது. | இலங்கையில் நடைபெறவுள்ள போட்டிகளை நடத்துவதில் தோல்வியடையாமல் இருக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் உறுதியளிக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 அக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த சங்க கட்டளையின் III ஆம் பிரிவின் (XI) பிரகாரம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் சுழற்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இனம் காணப்பட்டிருந்த நடவடிக்கைகளுக்கு உரிய காலப்பகுதிகள் நிதியத்தின் நிதியீட்டம் செய்யப்படும் விதம் மற்றும் உத்தேச செலவினங்கள் தொடர்பில் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாடுகளுக்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கூட்டிணைந்த திட்டத்தில் தேவையான மேம்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 அக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த சங்கங்களின் கட்டளையின் III பிரிவின் (XII) பிரகாரம் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த 2023 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கை திட்டத்தினுள் நடவடிக்கைகளுக்கு உரிய முன்னுரிமை மட்டங்கள் இனங்காணப்பட்டிடாததுடன், செயல்பாடுகள் அல்லாத நாளாந்த கடமைகளின் தன்மையுடனான பணிகளும் அதனுள் உள்ளடங்கி இருந்தன. எதிர்பார்த்த செலவினங்கள் மற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் திட்டவட்டமான காலப்பகுதி ஒன்று அதில் குறிப்பிடப்படவில்லை. 2023 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திருத்தப்பட்ட வரவு செலவு திட்டத்துடன் ஒத்ததாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தேவையான மேம்பாடுகளைச் செய்ய ஆலோசனை சேவைகளைப் பெற திட்டமிடப்பட்டுள்ளதுடன், அங்கு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய விடயங்கள் அவர்களின் பரிந்துரைகளின்படி சேர்க்கப்படும். | உத்தேச இலக்குகளை திறம்பட அடைய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்தப்பட வேண்டும். |

திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 பிரதான பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பெறுகைகள் கையேட்டின் ''பிரதான பெறுகைகள் திட்டம்'' தொடர்பிலான பகுதி ஒன்று உள்ளடக்கபட்டிராமையால் 2006 அரச பெறுகைகள் வழிகாட்டி கோவைக்கு உரியதாக பிரதான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிகளை மேம்படுத்தி நாளதுவரையாக்குதல், முறையான மற்றும் வெளிப்படையானதாக மாற்ற புதிய நடவடிக்கைகளைச் சேர்க்கும் பணியில் சர்வதேச கணக்காய்வு நிறுவனமொன்றின் சேவை தற்போது பெறப்பட்டவாறு உள்ளது. | பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.4 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத் திட்டம் ஆண்டினுள் ஒரு தடவை திருத்தப்பட்டிருந்த போதிலும், அதனோடு ஒத்ததாக வருடாந்த பெறுகைகள் திட்டத்தின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்திற்கான நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டபடி, 2023 ஆம் ஆண்டில் தேவையான திருத்தங்கள் செய்யப்படவில்லை, மேலும் 2024 ஆம் ஆண்டு முதல் தேவையான திருத்தங்களைச் செய்ய நடவடிக்கை எடுப்போம். | நிறைவேற்றுக் குழுவின் ஒப்புதல் பெற்றுக்கொள்ளப் பட வேண்டியதுடன், வரவு செலவுத் திட்டத் திருத்தங்களுக்காக அதனோடு ஒத்ததாக வருடாந்த பெறுகைகள் திட்டம் திருத்தப்பட வேண்டும். |